# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR
# DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.77/2019 | Village | : | |
| Prosecution witness | : | PW - 7 | Taluk | : | |
| Name | : | **செல்வேந்திரன்** | Occupation | : | |
| Father Name | : | | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 28.03.2025**

**Accused A1, A3, A5 to A10 present. Accused A2 absent. U/sec.355 BNSS petition filed and allowed. A4 produced on PT warrant**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் தஞ்சாவூர் கீழவாசல் சாலைக்கார தெருவில் குடியிருந்து தற்காலிக பணியில் TNCCல் இருந்து வருகிறேன். சாட்சி ரமேசை தெரியும். 18.1.2018ம் தேதி இரவு 11.30மணிக்கு வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தேன். வெளியில் அழுகை சத்தம் கேட்டு வெளியே வந்து விசாரித்த போது அப்பு என்ற ஜெயகாந்தனை கொலை செய்து விட்டதாக சொன்னார்கள். இரவு 11.45மணிக்கு சம்பவ இடமான ஆதிமாரியம்மன் கோவில் முன்பாக உள்ள அரசு மதுபான கடைக்கு சென்றேன். அங்கு போலிசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அங்கு சாட்சி ரமேசும் நின்றுகொண்டிருந்தார். போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சிகளாக என்னிடமும் ரமேசிடமும் கையெழுத்து வாங்கினாார்கள். காட்டப்படும் 18.1.2018 தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகசர் **அதசாஆ.3**. பின்னர் இரவு 12.45மணிக்கு ஆய்வாளர் சம்பவ இடத்தில் இருந்து இரத்தம் கலந்த மண் சிறிதளவும் இரத்தம் இல்லாத மண் சிறிதளவும் இரத்தம் படிந்த விகேசி பிரைடு என்ற 10ம் நம்பர் சைஸ் பிரவுன் கருப்பு கலர் செருப்பு ஒரு ஜோடி ஆகியவற்றை மகசரில் என் முன்பாகவும், ரமேஷ் முன்பாகவும் ஆய்வாளர் கைப்பற்றினார். காட்டப்படும் 19.1.2018 தேதியிட்ட கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. அந்த கைப்பற்றுதல் மகசர் **அசாஆ.4**. இரத்தம் கலந்த மண் சிறிதளவு **சாபொ.4** இரத்தம் இல்லாத மண் சிறிதளவு **சாபொ.5**. இரத்தம் படிந்த விகேசி பிரைடு

என்ற 10ம் நம்பர் சைஸ் பிரவுன் கருப்பு கலர் செருப்பு ஒரு ஜோடி **சாபொ.6**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் விசாரணையில் வெளியில் அழுகை சத்தம் கேட்டு நான் வெளியே எழுந்து வந்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் வெளியே வந்து விசாரித்தபோது அப்பு என்ற ஜெயகாந்தனை கொலை செய்து விட்டதாக சொன்னார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. நான் இறந்து போன அப்பு என்கிற ஜெயகாந்தனின் உறவினர் என்றால் சரிதான். என் வீட்டிலிருந்து சம்பவ இடம் 4 கிமீ தூரம் என்றால் சரியல்ல. 300 மீ தூரம் தான். என் வீட்டிலிருந்து ஆதிமாரியம்மன்கோவிலுக்கு அண்ணாநகர், காமராஜ் நகரை தாண்டி தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். போலிசார் சம்பவத்தன்று இரவே என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அந்த கையெழுத்துக்களை நான் இரவு 11.45மணிக்கு மேல் போட்டேன். அதன்பிறகு நான் காவல் நிலையம் செல்லவில்லை. நான் சொல்வது போல் சொன்ன நாள், இடத்தில் கையெழுத்து போடவில்லை என்றாலும் இறந்துபோனவர் என் உறவினர் என்பதால் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டுவிட்டு சம்பவ இடத்தில் கையெழுத்து போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பார்வைமகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரை ஆய்வாளர் எழுதினார். நான் கையெழுத்து போடும் போது அதில் திருத்தங்கள் எதுவும் இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர். (மு.கூ.பொ)